சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 66/2020

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர். திருமதி. இந்திரா க /பெ. தங்கராஜ் | நாள் 04.08.2025 |
| வயது. 55 | தொழில் |
| கிராமம். ஆலிகுப்பம் | வட்டம். |

**மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்**

1. நான் மனுவில் மனுதாரர். நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். விபத்து சம்மந்தமான முதல் தகவல் அறிக்கை நகல் ம.த.சா.ஆ.1. என்னுடைய வெளியேற்றுக் குறிப்புரை மத.தசா.ஆ. 2. நான் புறநோயாளியாக சிசிச்சை பெற்றதற்கான ஆவணம் ம.த.சா.ஆ. 3. செட்டிநாடு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆவணம் ம.த.சா.ஆ. 4 மருத்துவ சிகிச்சைக்கான ஆவணங்கள் ம.த.சா.ஆ. 5. நான் பயணம் செய்த ஆட்டோவின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை ம.த.சா.ஆ.6. 2ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை, பதிவு சான்றிதழ், காப்பீட்டுச் சான்றிதழ் மற்றும் ஓட்டுநர் உரிமத்தின் நகல்கள் முறையே ம.த.சா. ஆ. 7 முதல் 10. என்னுடைய ஆதார் அட்டை மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகத்தின் நகல்கள்( அசலுடன் ஒப்பிடப்பட்டது) ம.த.சா.ஆ.11 மற்றும் 12. எனக்கு எடுக்கப்பட்ட நுண்கதிர்ப்படங்கள் ம.த.சா.ஆ.13. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது)